24th January 1964]

(எ) 'A', 'B' வகை பங்களாக்களிலும், 'A' டைப் வீடுகளிலும், 24 கெஜட் பதிவு அதிகாரிகள் வசித்து வருகின்றனர். மற்ற குடியிருப்புகளில் 217 என்.ஜி.ஓ.வினர் வசித்து வருகின்றனர்.

(ஐ) ஒருவருமில்லை.

SRI V. S. S. MANI : Sir, may I know whether the allottees sub-let their quarters to outsiders or to the staff members with permission or without permission?

கனம் திரு. பூ. கக்கன் : யார் யார் அந்தக் கல்லூரியிலே பணி ஆற்றுகிறார்களோ, அவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே இருக்கிற கெஸடெட் ஆபீசர்களுக்கும், நான்-கெஸடெட் ஆபீசர்களுக்கும் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

கனம் சபாநாயகர் : அவர்கள் பேரில் எடுத்துக்கொண்ட அந்த வீடுகளை அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது அரசாங்கத்தின் அனுமதி பெற்றுச் செய்கிறார்களா, இல்லையா, என்பது கனம் அங்கத்தினருடைய கேள்வி.

கனம் திரு. பூ. கக்கன் : அம்மாதிரி 'ஸப்-லெட்' செய்யக் கூடாது.

கலப்புத் திருமணம்

* 85 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதியோர்க்கு உதவி நிதி அளிப்பது போல கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளின் கலியாணச் செலவுக்கு ஏதாவது ஒரு நிதி வழங்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

(இ) பழங்குடிப் பெருமக்களின் வீடுகளில் பெண் எடுக்கும் மணமகனுக்கு இந்த உதவித் தொகையில் அதிகபட்சம் தரப் படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. ர. நல்லசிவம் : ஜாதியை ஒழிக்கவேண்டும் என்பதைப் பொதுவாக நாம் எல்லோருமே ஒப்புக்கொள்ளுகிறோம். சீக்கிரமாக ஜாதியை ஒழிக்கக் கலப்புத் திருமணம் ஒரு சாதனம் அல்லவா? இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய சட்டபூர்வமாக ஏதாவது சிக்கல் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கலப்புத் திருமணம் செய்துகொள்வதை நான் வரவேற்கிறேன். ஆனால், கலப்புத் திருமணம் செய்துகொள்ளுகிறவர்கள் செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. "கலப்புத் திருமணச் செலவை அரசாங்கம் கொடுக்குமா?" என்பது மூலக் கேள்வி. அதற்கு, 'இல்லை' என்று பதில் சொன்னேன். செலவு இல்லாமல் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் அதுதான் சீர்திருத்தத் திருமணம்.

[24th January 1964

திருமதி அ. கிருஷ்ணவேணி : கனம் சபாநாயகர் அவர்களே, பழங்குடி மக்கள் இதர சாதிப் பெண்களை மணந்தால் அவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சலுகை ஒன்றும் இல்லை. பாராட்டுதல் இருக்கும். (சிரிப்பு).

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கலப்புத் திருமணம் செய்யக் கூடிய நிலைமையில் உள்ளவர்களிடமிருந்து செலவுக்காகக் கோரி அரசாங்கத்திற்கு மனுக்கள் ஏதாவது வந்து இருக்கின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றுமில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்ளுகிற தம்பதிகள் நல்ல பொருளாதார நிலையில் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய பின் சந்ததிகள் அவ்வளவு பொருளாதார நிலையில் இல்லாத காரணத்தால், அந்த மக்கள் வாழ்க்கையில் பெரிய அவதிப்படவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிள்ளைகளுக்குச் சர்க்கார் உதவி செய்தால், இப்படிப்பட்ட திருமணங்கள் தொடர்ந்து நடைபெற வழியாக இருக்கும். ஆகையால், அரசு அதைக் கவனிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொருளாதார நிலை மாறுவதற்கு கலப்புத் திருமணம் காரணம் அல்ல என்று நான் கருதுகிறேன்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களுக்குச் சலுகையோ, பண உதவியோ இல்லை என்றாலும், இதை ஊக்குவிக்க வேலைவாய்ப்பு கொடுக்க அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பது என்ற உத்தேசம் இல்லை. ஆனால், கலப்புத் திருமணம் செய்துகொண்டார்கள் என்றால் அதற்குத் தடை இருக்காது. இதிலே செலவைக் குறைப்பதுதான் முக்கியமானது. கலப்புத் திருமணம், மற்ற திருமணம் இவைகளுக்கெல்லாம் திருமணப் பிரசங்கம் நடக்கிறது. பிரசங்கம் செய்ய வருகிறவர்கள் பணம் கேட்காமல் வந்தால் இந்தக் கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு அதுவே பெரிய நிவாரணமாக இருக்கும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அப்படித் திருமணம் செய்துகொள்கிறவர்கள் சமூகத்தில் துன்பப்படுகிறார்கள். அந்தத் துன்பத்தைப் போக்குவதற்காக அரசாங்கத்தினிடம் இருக்கக்கூடிய புறம்போக்கு தரிசு நிலங்களிலிருந்து ஆளுக்கு இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வீதம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு கலப்புத் திருமணம் செய்துகொண்டு துன்பப்படுகிறார்கள் என்றால், அவர்களுடைய நிலையை விளக்கி கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், அரசாங்கம் அவர்களுக்கு எந்த அளவுக்குப் பரிகாரம் அளிக்க முடியும் என்பதிலே கவனம் செலுத்தும்.

24th January 1964]

கனம் சபாநாயகர் : பணத்தையோ நிலத்தையோ வாங்கிக் கொண்டு ஆளை விட்டுவிடக் கூடாது. (சிரிப்பு).

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இப்படிக் கலப்புத் திருமணம் செய்துகொண்ட காரணத்திற்காக அந்த ஊரிலே இருக்கின்ற ஜாதிக்காரர்கள் அவர்களை ஜாதியிலிருந்து நீக்கி வைக்கும் கொடுமை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட கொடுமை நடைபெறுவதை அரசாங்கம் தடை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குக் கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. எம். எஸ். மணி : கலப்புத் திருமணம் செய்து வைக்க வருகிற தலைவர்களை அரசாங்க பஸ்ஸில் டிக்கட் இல்லாமல் அனுமதிக்க அரசினர் முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஸ் டிக்கட் கொடுப்பது ஒன்றும் பிரமாதம் இல்லை. அதற்காக இலவசமாக பஸ்ஸில் விட வேண்டிய அவசியம் இல்லை. யார் வருகின்றார்கள், எதற்காக வருகின்றார்கள் என்று தெரியாது. பஸ்ஸில் இதற்குச் சலுகை வேண்டியதில்லை.

கனம் சபாநாயகர் : பஸ்ஸில் இலவசமாக வருவதென்றால் ஒருக்கால் அவர்களுடைய அந்தஸ்துக்குக் குறைவாக இருக்குமோ என்னவோ !

திரு. செ. மாதவன் : அண்மையில் நம்முடைய உயர்நீதி மன்றம், 'ஜாதிப் பிரஷ்டம் (எக்ஸ்-கம்யூனிகேஷன்) செய்வது குற்றம் ஆகாது' என்று தீர்ப்பு தந்திருக்கிறது. அதற்குப் பின்னராவது, இந்தக் கலப்புத் திருமணம் செய்தவர்களை ஜாதிப் பிரஷ்டம் செய்தால் குற்றம் ஆகும் என்று சட்டம் கொண்டுவர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்தத் தீர்ப்பைப்பற்றிக் கனம் உறுப்பினர் கூறுகிறார்களா, அந்தத் தீர்ப்பை நான் படிக்கவில்லை. பொதுவாக, ஜாதிக் கட்டுப்பாடு செய்வது என்பது அனுமதிக்க முடியாத விஷயம். அவ்வாறு எங்காவது குறிப்பிட்ட இடத்தில் தவறுதலாக நடந்துகொண்டால் அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அப்பொழுது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கலப்புத் திருமண மக்களுக்கு அரசாங்கம் ஒத்தாசை செய்யாவிட்டாலுங்கூட, அமைச்சர்களாவது தலைமைதாங்கி அதை நடத்தி வைப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைச்சர்களை அழைத்து, அமைச்சர்களுக்கும் அங்கு போகக்கூடிய சௌகரியம் இருந்தால், காசு ஒன்றும் கேட்காமல், சாப்பாடு கூடச் சாப்பிடாமல், திருமணத்தை நடத்திவைக்கத் தயாராயிருக்கிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் கலப்புத் திருமணம் செய்து வைப்பதற்குப் பிரசங்கம் செய்ய வருகிறவர்கள் பணம் கேட்காமல் வந்தால் நன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சருக்குச் சொந்த அனுபவம் ஏதாவது இதிலே உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சொந்த அனுபவம் ஒன்றும் இல்லை. சில தலைவர்கள் திருமணத்திற்கு வந்து பேசவேண்டுமென்று அழைக்கப்பட்டால் 50 ரூபாய், 100 ரூபாய் கேட்கிறார்கள் என்று பல புகார்கள், பல வரலாறுகள் இருக்கின்றன.

திரு. து. ப. அழகமுத்து : பணம் கொடுத்து அனுபவம் முதல் அமைச்சருக்கு ஏதாவது உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருமண வைபவத்தில் பேச்சுக்கு இடம் இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் எங்கள் வீட்டில் கல்யாணத்தின்போது பிரசங்கம் வைக்க அனுமதிப்பதில்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு

*86 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் நமது ராஜ்யத்தில் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு ஆஜரான மாணவர்கள் எத்தனைபேர், மாவட்டவாரியாக?

(இ) இத்தேர்வில் வெற்றி பெற்ற (1) ஆண்கள் (2) பெண்கள் எத்தனைபேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The particulars in respect of the S.S.L.C. Public Examination held in March 1963 are furnished in the statement [a] placed on the table of the House.

திரு. ஆ. கு. சுப்பையா : ஆஜரான மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, தேர்வு பெற்ற மாணவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குப் பல காரணங்கள் உண்டு. மாணவர்களுடைய தரம், பள்ளிக்கூடத்தின் தரம், சொல்லிக் கொடுக்கிறவர்களின் தரம் எல்லாம் சேர்ந்துதான் இது ஏற்படுகிறது. ஆனால், சென்ற பரீட்சையிலே தேர்வு முடிவுகளில் சற்று அபிவிருத்தி ஏற்பட்டது என்றுதான் இப்பொழுது குறிப்பிடலாம்.

---

[a] Printed as Appendix I on page 150.